# தென்னாசியப் பிராந்தியத்தின் ஜனநாயகம், வன்முறை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த பகுப்பாய்வு

# Analysis of Democracy, Violence and Human Rights Violation in South Asian Region

AW. Fathima Benazir

Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
awfnusla@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** ஜனநாயகம், வன்முறை, மனித உரிமை என்ற சொற்பதங்கள் தென்னாசிய பிராந்தியத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றதாகும். அபிவிருத்தியினை எட்டிய பல நாடுகளில் அது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரே சாத்தியமானது. தென்னாசிய அரசுகள் போன்ற பல்லின சமூகம் ஒன்றில் ஜனநாயகத்தினை கட்டியெழுப்புதல் என்பது சிக்கல் தன்மை வாய்ந்ததாகும். அவ்வாறே வன்முறைக்கு பேர்போன ஒரு பிராந்தியமாகவும் தெற்காசிய பிராந்தியம் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இப் பிராந்தியம் தவறியுள்ளது எனலாம். பொதுமைப்பாட்டுக்கு முரணாக வேறுபாடுகள் வெளிப்படும்போது ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்பன மீறப்படுகின்றது. இவற்றின் ஒரு வெளிப்பாடாக வன்முறையும் எழுந்து விடுகின்றது. அதிலும் குறிப்பாக காலனித்துவ செயற்பாடுகள் உள்ளடங்கலான பல்வேறு காரணிகளின் தாக்கத்தினால் தென்னாசியாவில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை கட்டியெழுப்புவது நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. சுதந்திரத்திற்குப் பிந்திய யுகத்தில் தேசத்தினை கட்டியெழுப்புதல் தளர்வுற்று இருப்பதனால் புதிய தேசிய அடையாளத்தினூடாக உருவாக்கப்படும் ஐக்கியம் இந் நாடுகளின் நீண்டகால எதிர்பார்க்கையாக மட்டுமே உள்ளது. வெற்றிகரமான தேச நிறுமானத்திற்கு உதவும் ஜனநாயக நிறுவனங்கள் பல இந்நாடுகளில் சிதைவுற்று உள்ளன. இந்த வகையில் மனித உரிமையினை பேணுதல் மற்றும் ஜனநாயகத்தினை கட்டியெழுப்புதல் என்பன தென்னாசிய அரசுகளுக்குரிய முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளதனை அவதானிக்கலாம். ஆகவேதான் இந் நெருக்கடிகள் குறித்த பண்புசார் முறையிலமைந்த ஒன்றாக இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.

**பிரதான சொற்கள்:** ஜனநாயகம், வன்முறை, மனித உரிமை, தென்னாசியப் பிராந்தியம்

## அறிமுகம்

உலகின் அனைத்துத்தரப்பினரதும் கவனத்தையும் ஈர்த்ததொரு பிராந்தியமாக விளங்கும் தென்னாசியப் பிராந்தியமானது இந்திய உப கண்டத்தில் உள்ள இறைமை கொண்ட எட்டு அரசுகளையும் வேறுபட்ட அரசியல் முறைகளையும் அவை சார்ந்த அரசியல் நிறுவனங்களையும் கொண்டு பல்லினத்தன்மை நிறைந்ததாக காணப்படுகின்றது. இப்பிரதேசங்களில் 200 பரந்த இனக்குழுக்களும் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சிறிய அளவினாலான இனக்குழுக்களும் வாழ்ந்து வருகின்றனர். மொழி ரீதியாக நோக்கின் 422 மில்லியன் மக்களால் ஹிந்தி மொழியும் 210 மில்லியன் மக்களால் பெங்காளி மொழியும்

ஏனைய மக்களால் தமிழ், உருது, சிங்களம் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகளை பேசும் பண்பாடும் கொண்ட பிரதேசமாக இப்பிரதேசம் திகழ்கிறது. பிராந்திய மதமாக இந்து மதம் 63.8% ஆக காணப்படுவதுடன் 30.08% ஆக இஸ்லாமும் காணப்படுகின்றது. உலகின் இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் அதிகமான மக்கள் இப்பிராந்தியத்திலேயே உள்ளனர். அதாவது பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளிலேயே 2ம், 3ம், 4ம் இடங்களில் இம்மக்கள் வசித்து வருகின்றனர் (Aliff, 2016).

ஐரோப்பியர்களின் இறுதியாளர்களாகிய ஆங்கிலேயர்களது ஆளுகையானது இப் பிராந்தியத்தின் அனேகமான எல்லா நாடுகளிலும் நிலைத்திருந்ததோடு ஜனநாயக அரசியல் முறைமை அறிமுகம் செய்யப்படவும் காரணமாகியது. இவர்களது ஆட்சிக் காலத்தில் கட்டமைப்பு ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பல்வேறு அபிவிருத்திகளை இந் நாடுகள் கண்டன. அந்தவகையில் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை, பாராளுமன்ற ஜனநாயகம், கட்சி அரசியல், பொதுத்துறை நிர்வாகம், யாப்புறுவாதம் போன்றவற்றை சுட்டிக் காட்டலாம். 1947ல் பிரித்தானியா, இந்தியா மற்றும் பாகிஸ்த்தானுக்கு சுதந்திரம் வழங்கியதை அடுத்து ஏனைய நாடுகளுக்கும் படிப்படியாக சுதந்திரம் வழங்கியதோடு தமது நாட்டின் ஜனநாயக அரசியல் முறைமைகளையும் இந்நாடுகளில் புகுத்த முற்பட்டன (Sugata & Ayesha, 2017). சுதந்திரத்திற்குப் பின்னர் இந்நாடுகள் மேலும் பல புதிய ஜனநாயக முறைமைகளை புகுத்த முற்பட்டன.

இறுதியில் 1985 ஆம் ஆண்டு காத்மண்டு நகரில் ஒன்றுகூடிய பிராந்திய தலைவர்களால் பிராந்திய, கலாசார மரபுரிமை, வர்த்தக உறவுகள், பிராந்திய பாதுகாப்பு போன்ற பல விடயங்களுக்காக சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டு பிராந்திய நலன் சார் விடயங்களிலும் தென்னாசிய நாடுகளுக்கிடையிலான ஒருமைப்பாட்டை பேணுவதிலும் பெரும்பங்காற்றி வருகின்றது.

தென்னாசிய பிராந்தியமானது தனிப்பட்ட பண்பாடு, கலாசாரம், மொழி, மதம், கலை, அரசியல், பொருளாதார நடவடிக்கைகள், வாழ்வியல் முறைகள் என்பவற்றில் தனக்கேயுரிய தனிமுதன்மையான சிறப்பம்சங்களை கொண்டு காணப்படுகின்றது. எனினும் ஜனநாயகம், வன்முறை மற்றும் மனித உரிமைமீறல் போன்றன அதிகமாக இடம்பெறும் பிராந்தியமாகவும் இப்பிராந்தியம் காட்சியளிக்கின்றது. அந்தவகையில் தென்னாசியாவின் ஜனநாயகம், வன்முறை மற்றும் மனித உரிமைமீறல் போன்றவற்றின் தன்மையினை ஆராய்வதாக இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது எனலாம்.

**ஆய்வுப் பிரச்சினை**

சர்வதேச ரீதியில் ஏனைய பிராந்தியங்களின் கவனத்தை ஈர்த்த ஓர் பிராந்தியமாக தென்னாசியப் பிராந்தியம் காணப்படுகின்றது. இப்பிராந்தியமானது அரசியல் சமூக பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் தனித்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. இவற்றிற்கு அதன் பல்வகைத்தன்மை காரணமாய் அமைந்தது. மேலும் ஜனநாயகத்திற்கும் வன்முறைக்கும் பேர்போனதொரு பிராந்தியமாகவும் உலக நாடுகளின் மத்தியில் தென்படுகின்றது. அவ்வாறே இப்பிராந்தியமானது அரசியல் ரீதியாக நவீனத்துவம்


ISBN 978-624-5736-14-0

அடையாததாகவும் சமூக ரீதியாக நவீனத்துவம் அடையாததாகவும் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடையாததாகவும் காணப்படுகின்றது. மேலும் தேசத்தினை கட்டியெழுப்புவதிலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. ஆகவேதான் இக்கட்டுரையானது தென்னாசிய பிராந்தியத்தில் ஜனநாயகம் வன்முறை மற்றும் மனித உரிமை மீறல்களை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது பின்வரும் ஆய்வு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ளது.

- தெற்காசியப் பிராந்தியத்தின் ஜனநாயகத்தின் தன்மையினை வெளிப்படுத்தல்.
- தெற்காசியப் பிராந்தியத்தின் வன்முறைக்குப் பெயர் போன பிராந்தியம் என்பதை கண்டறிதல்.
- தெற்காசியப் பிராந்தியத்தின மனித உரிமை மீறலின் நிலைப்பாடு குறித்து வெளிப்படுத்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது பண்பு ரீதியான விமர்சனப் பகுப்பாய்வாகும். இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், அரசாங்க ஆவணங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உற்படுத்தப்பட்டன.

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**தெற்காசியாவில் ஜனநாயகம்**

தெற்காசியப் பிராந்தியத்தின் ஜனநாயக அரசியல் முறைமைக்கு சவால் விடும் பல்வேறு காரணிகள் பிற்பட்ட காலங்களில் இந் நாடுகளில் முளைக்கத் தொடங்கின. ஜனநாயக நிறுவனங்கள் பல சிதைவுற்றன. இதனை வேறு வார்த்தையில் சொல்வதானால், உலகளவில் ஜனநாயகம் அதிகமாகப் புறக்கணிப்படுகின்ற ஒரு பிராந்தியமாக தெற்காசியா காணப்படுகின்றது. தெற்காசியப் பிராந்தியம் உலகின் ஏனைய பிராந்தியங்களைக் காட்டிலும் பல்வகைமை கொண்டதாகக் காணப்படுவது இதற்கான காரணங்களில் ஒன்றாகக்கூட இருக்கலாம்.

இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் முடியாட்சியின் ஆதிக்கப் போக்கு என்பன ஜனநாயகத்தை சிறப்பாக பேண முடியாதவாறு தடைவிதித்தன. இன்றும் இந் நிலை பல வழிகளில் தொடர்ந்திருக்கின்றன. இந்நாடுகளின் வளப்பற்றாக்குறை மற்றும் வறுமை ஆகியன ஜனநாயக நிறுவனங்களின் சீறிய செயற்பாட்டிற்கு சவால் விடுகின்றன. இன, மத, மொழி, சாதி ரீதியிலான வேறுபாடுகள் தேசிய ஒருமைப்பாட்டுடனான ஜனநாயக அரசியல் செயல்பாட்டிற்கு தாக்கத்தை செலுத்துகின்றன.

இவ்விடத்திலுள்ள ஆச்சரியம் என்னவென்றால்,''இந்தியா ஒரு மதச்சார்பற்ற அரசு''(India is one of the Secularist State) என தனது அரசியல் யாப்பில் பிரகடணப்படுத்தியிருக்கின்ற, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடென தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கின்ற இந்தியாகூட இந்த 'ஜனநாயகம்' என்ற விழிம்பிலிருந்து விலகியிருப்பதுதான்.

பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் பொருளாதார புலனாய்வு பிரிவு (Economist Intelligence Unit), 2019 ஆம் ஆண்டிற்கான ஜனநாயகக் குறியீட்டுப் பட்டியலில் இந்தியாவை,''குறைபாடுள்ள ஜனநாயகம்'' என்று பட்டியலிட்டுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டு பெரும்பாலான நாடுகளில் ஜனநாயக உரிமைகள் பின் தங்கியுள்ளதாகவும், அதிலும் இந்தியா 10 இடங்கள் சரிந்து 51 வது இடத்திற்கு வந்துள்ளது என்றும் இந்த அமைப்பு அறிக்கையிட்டுள்ளமை இதற்கு எடுத்துக்காட்ட முடியும்.

இதற்கு காரணம், இந்தியாவின் சிவில் சுதந்திரத்தில் ஏற்பட்டுள்ள சரிவாகும். நாட்டில் கொண்டு வரப்பட்ட குடியுரிமை (திருத்தம்) சட்டம், ஜம்மு- காஷ்மீர் அத்துமீறல் மற்றும் சர்ச்சைக்குரிய என். ஆர். சி. (குடிமக்களின் தேசிய பதிவு) என்பதாகவே இவ்வமைப்பு காரணம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 1977 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு உண்மையில் சில அலங்காரங்களுடன் மேற்கொள்ளப்பட்டது. பாதை நெடுகிலும் கட்சிக் கொடிகளும், பதாதைகளும் தொங்க விடப்பட்டிருந்தன . பல வாக்காளர்கள் சிறந்த ஆடைகளை அணிந்துகொண்டு முழு குடும்பங்களாகவும் வாக்களித்தனர். கிராமத்தில் வாக்குப் பதிவு மிக அதிகமாக இருந்தது. குறைந்தபட்சம் 80 சதவீத எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது. அநேகமாக 90 சதவீதத்திற்கு அது இருந்தது" (Spencer, 2007).

தெற்காசியப் பிராந்தியத்தில் உறுப்பு நாடுகளாகக் காணப்படும் பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் மக்களின் சிவில் சமூக சுதந்திரம் என்பது 'பகல் கொள்ளை' என்றளவில் மீறப்படுகின்ற செயற்பாடுகளையே காணலாம். உதாரணமாக, 2018 டிசம்பரில் நடைபெற்ற பங்களாதேஷ் பொதுத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக சுமார் 600,000 பாதுகாப்பு அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அதனையும் மீறி பல இடங்களிலும் வன்முறைகள் வெடித்தன. எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் பொலிசாருக்குமிடையே நடந்த மோதல்களில் 12 பேர் கொல்லப்பட்டதாக அப்போது செய்திகள் தெரிவித்தன (Spencer, 2007).

தெற்காசியப் பிராந்தியத்தில் ஜனநாயத்தை சிறப்பாக பேணுவதற்கு சவாலாக உள்ள காரணிகளை பின்வருமாறு நோக்கமுடியும்.

- **வளப்பற்றாக்குறையும் வறுமையான சமூகக் கட்டமைப்பும்**

தென்னாசிய நாடுகளில் அனைத்தும் வளப்பற்றாக்குறையுடைய நாடுகளாகவே உள்ளன. இங்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் நிலையும் அதிகமாக உள்ளது. இந்நாடுகளில் ஒன்றான வங்களாதேஷ் உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றாக அடையாளங் காணப்பட்டுள்ளது. நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளில் இயற்கை வளங்கள் குறைவாகவே

உள்ளது. இந்தியாவில் ஓரளவு இயற்கை வளங்கள் உள்ள போதும் தொழில்நுட்பத்தில் போட்டி போட்டு முன்னேறி வருகின்ற போதும் அதன் அதிக சனத்தொகை அங்கு சவாலாக உள்ளது. இதனால் ஜனநாயக அரசியல் முறைமைகளை பேணுவது பற்றி இந்நாட்டு மக்கள் அதிகம் சிந்திப்பதை விடுத்து தமது அன்றாட வாழ்வுக்கான போராட்டத்திலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். வறுமையின் விளைவு, சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவதற்கு இம் மக்களை தூண்டியுள்ளது. இதனால் போதைப் பொருள் கடத்தல், ஆட்கடத்தல், கொள்ளையடித்தல், வன்முறைகள் போன்ற ஜனநாயகத்திற்கெதிரான விரோதச் செயல்கள் இடம்பெறுகின்றன (Aliff, 2016).

- **கொள்கைப் பலவீனமான அரசியல் கட்சிகளும் குறைபாடான அரசியல் கலாச்சாரமும்.**

ஜனநாயக அரசியல் முறைமைகளின் சிறப்பான இயக்கத்திற்க அரசியல் கட்சிகளின் வழிநடத்தல்கள் மிகவும் அவசியமாகின்றன. ஆனால் தென்னாசிய நாடுகளில் கோட்பாட்டு ரீதியில் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு வழிநடாத்தப்படுகின்ற அரசியல் கட்சிகள் மிக அரிதாகவே உள்ளன. அரசியல் கட்சிகள் எல்லாம் அதிகாரத்தை கைப்பற்றி ஆட்சி பீடம் ஏறும் செயற்பாட்டிற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

ஒரு வகையில் இந்நாடுகளில் மக்கள் அரசியல் செயற்பாடுகளில் பங்க பெறுவதற்கும் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நுழைவதற்கும் இவ் அரசியல் கட்சிகளே வழிவகுத்தன என்று கூறினாலும் இன்றுள்ள வன்முறை கலந்த அரசியல் கலாச்சாரத்திற்கும் வழிபாட்டு அரசியல் தலைமைத்துவத்திற்கும் தனிமனித சர்வாதிகாரத்திற்கும் இவ் அரசியல் கட்சிகளே பெரும் பங்களிப்புச் செய்துள்ளன.

இந் நாடுகளில் சாதி மத வேறுபாடுகளை கருத்தில் கொண்டே அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. கட்சி அரசியலில் தீவிர விளைவுகளில் ஒன்றாக வளர்ந்திருக்கும் அரசியல் சகாய முறையும் இத் தென்னாசிய நாடுகளிலும் ஜனநாயக அரசியல் முறைமைகளை சிறப்பாக பேணுவதற்கு பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது. அத்துடன் அதிகாரத்தை கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டு அரசியல் கட்சிகள் ஒரே அணியாகச் சேர்வதும் பின்னர் எதிர் அரசியல் கட்சிகளுடன் இணைவதுமான செயற்பாடுகள் உறுதியான அரசாங்கத்தை கட்டியெழுப்புவதற்கு பாரிய சவாலாகவே உள்ளது எனலாம்.

- **பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பு**

தெற்காசிய நாடுகளானது பிரதானமாக பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன. இதனால் இந்நாடுகளில் இன, மத, மொழி மற்றும் சாதி வேறுபாடுகள் தீவிரமடைந்துள்ளன. தேசிய விடுதலை காலத்தில் இவ் வேறுபாடுகளை மறக்கச் செய்து விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்த பல இயக்கங்கள் விடுதலையின் பின் அதிகார அரசியலுக்காகப் போராடியமையினால் அவற்றால் சமூகத்தை ஒற்றுமைப்படுத்த முடியவில்லை. இவற்றால் வகுப்பவாத பிரிவுகள் சமூகத்தில் தோற்றம் பெற்றதோடு குடும்பச் செல்வாக்கு, உயர்குழாம் ஆதிக்கம், சாதி வேற்றுமைகள் போன்றன அரசியலில் செல்வாக்குப் பெற வந்தன.


ISBN 978-624-5736-14-0

எடுத்துக்காட்டாக இந்தியாவில் நேரு குடும்பம், பகிஸ்தானில் ஜின்னா குடும்பம், இலங்கையில் பண்டாரநாயக்கா மற்றும் சேனநாயக்க குடும்பம் நேபாளத்தில் ரணா பரம்பரை போன்றவற்றை குறிப்பிட முடியும்.

- **அடிப்படைவாத சிந்தனைகளும் செயற்பாடுகளும்**

மேலும் இத் தென்னாசிய நாடுகளிலும் சமூகக் கட்டமைப்பிலும் அரசியலிலும் அடிப்படைவாத சிந்தனைகளும் செயற்பாடுகளும் தீவிர செல்வாக்கை செலுத்தியதுடன் ஜனநாயத்தை கட்டியெழுப்புவதிலும் பாரிய தாக்கத்தை செலுத்தின. விசேடமாக மத அடிப்படைவாதத்தினை குறிப்பிட முடியும். இப் பிராந்திய நாடுகளில் அரச சார்பான மதத் தீவிரவாதம் செல்வாக்குச் செலுத்தின. இந்தியாவில் அயோத்தி முரன்பாடு, பம்பாய் கலவரங்கள் குஜராத் வன்முறைகள் என்பன ஜனநாயகத்தை பேணுவதில் இன்றும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பகிஸ்தானில் இஸ்லாமியமயமாக்கம், இலங்கையில் பௌத்தமயமாக்கம் போன்றன காணப்படுகின்றன.

ஆகவேதான் சர்வதேச ரீதியில் பிராந்திய முக்கியத்துவம் பெற்றுள்ள தென்னாசியா பிரித்தானியரின் ஆளுகையிலிருந்து விடுதலை பெற்று சுதந்திர ஜனநாயக அரசுகளாக மிளிர்ந்தாளும் தொடர்ந்தும் ஜனநாயக அரசியல் முறைகளைச் சிறப்பாகப் பேணுவதில் அந்நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியே வருகின்றன.

**தெற்காசியாவில் வன்முறை**

உலகில் வன்முறைக் கலாசாரம் மிகைத்துப் போன ஒரு பிராந்தியமாக தெற்காசியாவை அடையாளப்படுத்தலாம். முக்கியமாக மதவாதம், மொழிவாதம், தேசியவாதம் ஆகியவை இப்பிராந்தியத்தில் வன்முறைக் கலாசாரத்தை ஊக்குவிக்கும் புறநிலைக் காரணிகளாகும். மதத்தின் பெயராலும் (உதாரணம்: இந்தியா – பாகிஸ்தான்), மொழியின் பெயராலும் (உதாரணம்: பாகிஸ்தான் - பங்களாதேஷ்) பல வன்முறைகள் வெடிக்கப்பட்டு, புதியநாடுகள் உருவாக்கப்பட்டன. இலங்கை, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'பெரும்பான்மை இன' தேசியவாதங்களாலும், ஆப்கானிஸ்தான் நாடுகளில் 'அல்கைதா', 'தாலிபான்' போன்ற தீவிரவாத அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் மதவாதத் தீவிரப் போக்குகளாலும் தெற்காசியப் பிராந்தியம் இன்றுவரை இரத்தக் களமாகக் காட்சியளிக்கிறது.

இலங்கையில் 1980 களின் பிற்பகுதியில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போயினர். 1983 இல் நடைபெற்ற தமிழ் எதிர்ப்பு 'ஜுலை கலவரம்' நாட்டின் இன நெருக்கடியை மேலும் தூண்டியதுடன் உள்நாட்டுப் போருக்குள் தள்ளியது. 1983 ஜுலை வன்முறையில் சுமார் 3,000 பேர் இறந்து விட்டதாக கருதப்படும் அதேசமயம், 1987 - 1990 இற்கு இடைப்பட்ட காலங்களில் ஆயுதப் போர் முனையில் இறந்த தமிழர்களின் எண்ணிக்கை 40,000 ஆக உயர்ந்தது. அதே நேரத்தில் இரண்டு தசாப்த கால உள்நாட்டுப் போரில் இறந்தவர்களின் புள்ளிவிவரங்கள் வடக்கு மற்றும் கிழக்குத் தீவுகளில் 60,000 முதல் 100,000 வரை உயர்ந்துள்ளது (Wijewardene, Shermal & Nagaraj, 2014).

1983 ஜூலை 23 இல் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு வன்முறைதான் அதனை தொடர்ந்து பல தசாப்தங்களாக மிக மோசமான வன்முறைகள் இலங்கை தீவில் இடம்பெறுய்வதற்கு காரணமாக அமைந்தது. ஜூலைக் கலவரத்தின்போது சுமார் 4 இலட்சம் வரையிலான தமிழர்கள் இன அழிப்புக்குட்படுத்தப்பட்டனர். அதைத் தொடர்ந்த வன்முறைகளால் கோடானு கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டன. கொழும்பு நகர்களில் வசித்து வந்த தமிழர்கள் கப்பல்களில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனால், 15 இலட்சத்திற்கும் அதிகமானோர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதியாயினர். இக்கலவரம் வெலிக்கடைச் சிறையிலிருந்த தமிழ் அரசியல் கைதிகளையும் விட்டு வைக்கவில்லை. 1983 ஜூலை 25, 27 ஆம் திகதிகளில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நிறைவேற்றப்பட்ட கொடூரமான படுகொலைகளில் 54 தமிழ் கைதிகள் கொலை செய்யப்பட்டனர் (Wijewardene, Shermal & Nagaraj, 2014).

இது, இலங்கை இனப் பிரச்சினை உச்சகட்டத்திலிருந்த காலப் பிரிவில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்குமிடையில் நடைபெற்ற ஆயுதவழிப் போராட்டத்தில் ஏற்பட்ட இழப்புகள் குறித்த பதிவாகும். இது தெற்காசியப் பிராந்தியத்தில் வன்முறைக் கலாசாரத்தின் கோர முகங்களைக் காட்டப் போதுமானதாகும். இலங்கையின் வரலாற்றுக் காலம் தொட்டு பெரும்பான்மையினரைப் பற்றிய சிறுபான்மையினரின் அச்சம்; அவ்வாறே, சிறுபான்மையினரைப் பற்றிய பெரும்பான்மையினரின் அச்சம் காரணமாகவும், சில அரசியல் பின்புலக் காரணங்களாலும் சிங்களவர்களும் தமிழர்களும் தூண்டப்பட்டு ஒருவரை ஒருவர் எதிரிகளாகவும் விரோதிகளாகவும் பார்க்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் அரசியல் வழிப் போராட்டமாகவும் பின்னர் ஆயுதவழிப் போராட்டமாகவும் உருவெடுத்து பல லெட்சக்கணக்கான உயிர்களையும் சொத்தழிவுகளையும் பறிகொடுத்த, இலங்கையின் ஒரு கோர வடு. இப்பிரச்சினை ஒரு ‘தேசியவாதக் கொள்கையாகவே இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது (Wijewardene, Shermal & Nagaraj, 2014).

இவ்வாறான நிலைமைகளை தெற்காசியாவின் இலங்கையில் மட்டுமல்ல, உலகில் ஜனநாயக உரிமை மதிக்கப்படும் மிகப் பெரிய நாடாகத் திகழும் இந்தியாவில்கூட வன்முறைக் கலாசாரம் உச்சளவில் தாண்டவமாவதைப் பார்க்கலாம். இந்தியா ஒரு மதச்சுதந்திரமுள்ள நாடாக இருந்தபோதிலும் ‘இந்து மதத்தின் செல்வாக்கு மிகைத்து, ஆழமாக வேரூண்றி, இன – மத முரண்பாடுகளைத் தோற்றுவித்து வருவதுடன்,அரசியலில் தம்மை தக்கவைத்துக் கொள்வதற்காக தி.மு.கா…. போன்ற அரசியல் கட்சிகளால் அங்குள்ள சிறுபான்மை இன இஸ்லாமியர்களும் சீக்கியர்களும் வன்முறைக்குட்படுத்தப்பட்டும் வருகின்றனர்.

தேர்தல் என்றாலே பங்களாதேஷில் வன்முறைக்குப் பஞ்சமிருக்காது. தேர்தல் பிரசாரம் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே வன்முறைகள் வெடிக்கத் தொடங்கிவிடும். பாகிஸ்தானில் 2018 பொதுத் தேர்தல் வன்முறையில் 180 பேர் பலியாகி இருக்கிறார்கள். 500 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். வாக்குப்பதிவு நடைபெறும் நேரத்தில் வன்முறை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதால் பொலிஸார், இராணுவத்தினர் என மொத்தம் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 388 பேர் பாதுகாப்பு பணியில்

ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் தேர்தல் வரலாற்றில் இவ்வளவு பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**தெற்காசியாவில் மனித உரிமைகள்**

தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான பல்வேறு ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. தெற்காசிய பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தில் மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பதில் கைச்சாத்திட்டுள்ளன. இந் நாடுகள் தேசிய ரீதியாக தம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பு ரீதியாக அடிப்படை உரிமைகள் ஏற்பாட்டை உள்வாங்கியுள்ளன. இவ் அடிப்படையில் நின்றுகொண்டு தென்னாசிய பிராந்தியத்தினுடைய மனித உரிமைகள் குறித்து நோக்குமிடத்து, இப் பிராந்தியமானது பல்லின, மத, மொழி மற்றும் கலாச்சாரத்தை பின்பற்றுகின்மையினால் அப்பிராந்தியங்களில் மோதல், வன்முறை மற்றும் பயங்கரவாதம் என்பன தவிர்க்க முடியாதுள்ளது. இச்செயன்முறைகளானது இப் பிராந்தியங்களில் மனித உரிமைகளை சிறப்பாகப் பேணுவதில் சவால்களை எதிர்கொண்டு வருகின்றது.

ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு கலாச்சாரங்கள் பின்பற்றப்பட்டாலும் இந்நாடுகளில் ஆதிக்கமுள்ள கலாச்சாரமாக குறிப்பிட்ட கலாச்சாரமே செல்வாக்குச் செலுத்துகின்றது. எடுத்துக்காட்டாக இலங்கையில் பௌத்த மத செல்லாக்கு, இந்தியாவில் இந்துக்களின் செல்லாக்கு, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இஸ்லாத்தின் செல்வாக்கும் காணப்படுகின்றது. இதனால் ஏனைய குழுக்கள் பாதிப்படைகின்றன.

இலங்கையை பொறுத்தவரையில் இங்கு இடம் பெற்ற 30 வருடகால யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவடைந்த காலப்பகுதியிலும் தொடர்ச்சியாக பல்வேறு மனித உரிமைகள் மீறப்பட்டு வந்துள்ளன. இவ் யுத்த காலப்பகுதியில் ஆயிரக் கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டதுடன் காணாமலாக்கப்பட்டோர், இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கையும் அதிகமாகவே உள்ளன. மேலும் அரசியல் யாப்பு ரீதியாக உள்வாங்கப்பட்டுள்ள பௌத்த மதத்திற்கான முதன்மை ஸ்தானமானது ஏனைய மதங்களின் மதச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அத்துடன் யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக அதிகரித்து வருகின்ற வன்முறையானது அம் மக்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளமையினையே சுட்டிநிற்கின்றது. குறிப்பாக அளுத்கம மற்றும் திகன வன்முறை, கிறிஸ் மனிதன் பிரச்சினை, முஸ்லிம்களின் பொருளாதாரத்தினை முடக்குவதற்கான முயற்சிகள், முஸ்லிம்கள் முகமூடி அணியக் கூடாதுஎன்ற அரசாங்கத்தின் கோசம், முஸ்லிம் பிரதிநிதிகளை பதவியிலிருந்து அகற்றியமை மற்றும் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம்கள் தீவிரவாதிகளாக சித்தரிக்கப்பட்டமை போன்றவை அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக இடம் பெற்ற உரிமை மீறலினையே வெளிப்படுத்தி நிற்கிறது (Wijewardene, Shermal & Nagaraj, 2014).

அவ்வாறே காஷ்மீரை கைப்பற்றிக் கொள்வதற்காக இந்தியா மற்றும் பகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான முரன்பாட்டில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மேலும் மக்கள் இவ்விரு அரசுகளுடனும் இணைய விரும்பாது தனி நாடாக இருப்பதற்காகவே விரும்புகின்றனர். எனவேதான் அம் மக்கள் தமது சொந்தபூமியில் வாழ்வதற்கான சுதந்திரம் இல்லாது தமது உரிமைகளை இழந்து வருகின்றனர். அவ்வறே இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சி தாம் சார்ந்த மதத்தினரை ஆதரிப்பதுடன் முஸ்லிம்களுக்கெதிரான முரன்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே இந்நாடுகளில் மத சுதந்திரத்தினையும் மக்கள் அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது (Spencer, 2007).

அவ்வாறே பாகிஸ்தானின் ஆட்சிமுறைமையில் இடம்பெற்று வருகின்ற ஊழலானது மக்களின் அரசியல் மற்றும் நிர்வாக உரிமைகளை மீறுவதாகவே அமைந்துள்ளது. அத்துடன் இந் நாட்டில் யாப்பு ரீதியாக முஸ்லிம்களிலிருந்தே ஆட்சியாளர்கள் வரமுடியும் எனக் குிப்பிட்டுள்ளமையானது ஏனைய மதத்திலிருந்து ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு தடையாக உள்ளது. அத்துடன் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷில் காணப்படுகின்ற இராணுவமயமாக்கமானது இயல்பாகவே மனித உரிமை மீறல் இடம்பெற வழிசமைக்கின்றது எனலாம் (Silva, Peiris, Samarasinhe, 2002).

**முடிவுரை**

உலகின் அனைத்துத்தரப்பினரதும் கவனத்தையும் ஈர்த்ததொரு பிராந்தியமாக விளங்கும் தென்னாசியப்பிராந்தியமானது பல்லினத் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. தென்னாசிய பிராந்தியமானது தனிப்பட்ட பண்பாடு, கலாசாரம், மொழி, மதம், கலை, அரசியல், பொருளாதார நடவடிக்கைகள், வாழ்வியல் முறைகள் என்பவற்றில் தனக்கேயுரிய தனிமுதன்மையான சிறப்பம்சங்களை கொண்டு காணப்படுகின்றது. இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையில் பல்வேறு பொதுவான அம்சங்களும் பல்வேறு வேறுபட்ட அம்சங்களும் காணப்படுகின்றமையானது இதனது சிறப்பம்சத்தை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. எனினும், இப் பிராந்தியமானது தேசத்தை கட்டியெழுப்புவதில் பலவேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. தனித்துவமான பிராந்தியமாக இது கருதப்பட்டாளும் கூட இங்கு ஜனநாயகம், வன்முறை மற்றும் மனித உரிமைகள் என்பவற்றின் நிலைமிகவும் பின்தங்கியதாகவே உள்ளது. ஆகவேதான், இப்பிராந்தியத்தின் ஜனநாயகம், வன்முறை மற்றும் மனித உரிமைகளின் நிலை தொடர்பிலான கண்டுபிடிப்புகளை முன்வைப்பதாக இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.

**உசாத்துணைகள்**

Aliff, S. M. (2016). Issues of national unity in South Asia. *Kalam- International Research Journal, X* (1). Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

Fowsar, M. A. M. (2015). Nation Building in South Asia: A critical analysis. *Second International Symposium*. South Eastern University of Sri Lanka.

Galtung, J. (1996) *Violence, Peace, and Peace Research*. Retrieved from http://www.jstor.org/page/info/about/policies/terms.jsp.pdf

Silva, K.M.De. (2000). *Conflict and Violence in South Asia*. Kandy: International Center for Ethnic Studies.

Silva, K.M.De., Peiris, G.H., & Samarasinhe, S.W.R.De. (2002) *Corruption in Souyth Asia: India, Pakistan & Sri Lanka*. Kandy: International Center for Ethnic Studies.

Spencer, J. (2007). *Anthropology, Politics and the State: Democracy and violence in South Asia.* Cambridge University Press.. Sugata, B., & Ayesha. J. (2017). *Modern South Asia: History, Culture, Political Economy*. routledge.

Wijewardene, Shermal., & Nagaraj, K. (2014) Human Rights Practice in Sri Lanka. Colombo: International Center for Ethnic Studies.


ISBN 978-624-5736-14-0